**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.138 /2021**

**Deposition of P.W. 1**

**Name** : செல்லத்துரை

**S/o, D/o, W/o** : லாசர்

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of**

**Dated: 02.04.2025**

**Accused absent. Petition filed and allowed.**

முதல் விசாரணை-

நான் தற்போது பொள்ளாச்சியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் கட்டிமாங்கோடு, கரிசல்விளையில் வசித்து வந்தேன். நான் தமிழ்நாடு அரசுபோக்குவரத்து கழக திருவட்டார் பணிமனையில் ஓட்டுனர் பயிற்சியாளராக பணியாற்றி வந்தேன். தற்போது ஓய்வு பெற்று விட்டேன். இவ்வழக்கின் எதிரி சுஜினை தெரியும். அரசு பேரூந்திற்கு முன்னர் ஆட்களை ஏற்றக்கூடிய வேன்கள் வந்து கொண்டிருந்தது. அந்த வேனை நிப்பாட்டக்கூடாது செல் என்று கையை காட்டினேன். 26.03.2018ம் தேதி மாலை 05.30 மணிக்கு ஆற்றூர் புளியம்மூடு சந்திப்பில் வைத்து சம்பவம் நடந்தது. இவ்வழக்கின் எதிரியான சுஜின் வேனை வைத்து இடித்து விடுவதாக சொன்னார். எதிரி வேனை நிறுத்திவிட்டு என் முதுகிலும், இடது பக்க கையிலும் அடித்து விட்டார். கொன்று விடுவேன் என்று சொல்லி

மிரட்டி வேனை எடுத்து சென்று விட்டார். திருவட்டார் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சட்ட விரோதமாக ஆட்களை வேனில் ஏற்றினால் அது சம்மந்தமான புகாரை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். வட்டார போக்குவரத்து அலுவலருக்கு தான் சாலையில் செல்லும் வாகனங்களை மறித்து சோதனை செய்ய அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் அதிகாரிகள் எங்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். போக்குவரத்து துறையின் எழுத்து பூர்வமான உத்தரவு இல்லை, வாய்மொழி உத்தரவின் படி தான் போனோம். வாய்மொழி உத்தரவின் படி சோதனை நடத்த எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. பயணிகள் யாரும் சட்டவிரோதமாக வேனில் ஆட்கள் ஏற்றுவது தொடர்பாக புகார் கொடுக்கவில்லை. புகாரிலும், போலீசார் விசாரணையிலும் என் முன்பாக எதிரி வேனை நிறுத்தி ஆட்களை ஏற்றியதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வேனில் இருந்த நபர்கள் என்னிடம் சட்ட விரோதமாக ஆட்களை ஏற்றி வந்ததாக வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. சம்பவ இடத்திலிருந்து திருவட்டார் காவல்நிலையம் 1 கி.மீ துாரம் இருக்கும். காவல்நிலையத்தை கடந்து தான் அரசு பணிமனைக்கு செல்ல வேண்டும். சம்பவ நாளில் புகார் கொடுக்கவில்லை. மறுநாள் தான் கொடுத்தேன். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால்

அன்றையதினமே புகார் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடம் மூன்று சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். அழ்கியமண்டபத்திலிருந்து புளியம்மூடு சந்திப்பு சென்று இடது பக்கம் திரும்பினால் மார்த்தாண்டம் செல்லும் சாலையும், வலது பக்கம் திருவட்டார் செல்லும் சாலை செல்கிறது என்றால் சரிதான்.



சம்பவ இடம் போக்குவரத்து மிகுந்த இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி வரமுடியாது என்றால் சரியல்ல. போக்குவரத்து மிகுந்த இடத்தில் வேகமாக வாகனத்தை ஓட்டலாமென பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காயத்திற்கு சிகிச்சை பெற நான் மருத்துவமனை செல்லவில்லை. சம்பவ இடத்தின் அருகே ஆல்பன் மருத்துவமனை உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றும், அதனால் தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையின் போது வீட்டில் மருந்து எடுத்து கொண்டதாக கூறவில்லை என்றால் மருந்து பற்றி போலீசார் கேட்கவில்லை. சம்பவம் முடிந்த உடன் பணிமனை சென்று வேலையை முடித்து அதன் பிறகு வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லாத சங்கதிகள் குறித்து மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் முன்விரோதம் கிடையாது. முன்விரோதம் இல்லாததால் எதிரி என்னை கொலை செய்ய முயற்சி

செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. மேலாளர் சொல்லி நான் புகார் கொடுத்தேன். நானும், மேலாளரும் போலீசாருடன் ஆலோசனை செய்து போலீசாரின் அறிவுறுத்தல் படி காலதாமத்துடன் கூடிய பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரில் பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த எதிரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெயரை போலீசார் சொல்லி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நடக்காத சம்பவம் குறித்து மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்



சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் எழுதி வைத்திருந்த வாக்குமூலத்தை படித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 138/2021**

**Deposition of P.W.** 2

Name : செல்வம்

S/o, D/o, W/o : யோவான்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:02.04.2025

Accused absent. Peititon filed and allwoed.

முதல் விசாரணை–

நான் உண்ணாமலைக்கடை பாதிரி பள்ளிவிளையில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி

வருகிறேன். அ.சா.1ஐ எனக்குத் தெரியும். ஓட்டுனர் பயிற்சியாளராக பணிபுரிகிறார். எதிரியை தெரியும். 26.03.2018ம் தேதி மாலை 05.30 மணிக்கு புளியம்மூடு சந்திப்பில் நானும், அ.சா.1–ம் அரசு பேருந்துக்கு இழப்பு ஏற்படுத்தும் விதமாக இயக்கப்படும் வாகனங்கள் தொடர்பாக பணிபுரிந்தோம். TN 75 P 1189 வேனை அ.சா.1ஐ கையை காட்டி நிறுத்தினார். அந்த வேனை இவ்வழக்கின் எதிரிஓட்டி வந்தார். அனுமதியில்லாமல் ஏன் வேனை ஓட்டுகிறீர்கள் என்று அ.சா.1 கேட்டதற்கு அ.சா.1ஐ பார்த்து எதிரி பிண்டாமோனே, தாயோழி என்று கெட்ட வார்த்தைகள் போட்டு பேசினார். எங்களை வாழவிடமாட்டீங்களா



என்று சொல்லி செல்லத்துரையை எதிரி அடித்து விட்டார். அ.சா.1ஐ எதிரி கையால் அவரது முதுகில் அடித்தார். உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டி வேனை எடுத்து கொல்வது போல் வந்தார். நாங்கள் விலகி கொண்டோம். சிறிதுதூரம் சென்ற பிறகு நிறுத்தி விட்டு உங்களை கொன்றுவிடுவேன் என்று சொன்னார். நடவடிக்கை எடுக்க அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

அரசு அனுமதியில்லாமல் பயணிகளை ஏற்றினால் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் புகார் கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அதன் பேரில் நடவடிக்கை எடுக்க அதிகாரம் பெற்றவர் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எதிரி ஓட்டி வந்த வாகனத்தை கையை காட்டி மறித்ததாகவும், அவர் நிறுத்தாமல் சென்றதாகவும் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சாலையில் செல்லும் வாகனங்களை வழிமறிக்கும் அதிகாரம் எங்களுக்கு

இல்லை என்றால் சரிதான். பயணிகள் யாரும் எழுத்துபூர்வமாக பணிமனைக்கு புகார் கொடுக்கவில்லை. அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் விதமாக வாகனத்தை இயக்கினால் மோட்டார் வாகன ஆய்வாளரிடமோ, காவல்துறையோ புகார் கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். விசாரணையில் எதிரி வேனை எங்கள் முன்பாக நிறுத்தி ஆட்களை ஏற்றியதாக நாங்கள் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் எத்தனை பயணிகள் இருந்தார்கள் என்றோ, அவர்களில் யாரும் சட்ட விரோதமாக ஆட்களை ஏற்றி வந்ததாக எங்களிடம் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி சட்டவிரோதமாக பயணிகளை ஏற்றி வாகனம் ஓட்டவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து



திருவட்டார் காவல்நிலையம் 1 கி.மீ தொலைவில் தான் உள்ளது. திருவட்டார் காவல்நிலையத்தை கடந்து தான் பணிமனைக்கு செல்ல வேண்டும். சம்பவ நாளன்று புகார் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் சமபவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் மூன்று முக்கு ரோடு என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வாகனம் வேகமாக வரமுடியாது என்றால் சரியல்ல. அ.சா.1 மருத்துவமனைக்கு செல்லவில்லை. சம்பவ இடத்திற்கு அருகே ஆல்பன் மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அ.சா.1–க்கு காயம் இல்லாததால் தான் மருத்துவமனையில் சென்று சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், அ.சா.1க்கும் முன்விரோதம் கிடையாது. முன்விரோதம் இல்லாததால் அ.சா.1ஐ கொலை செய்ய முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. மேலாளர் கூறிய படி புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேலாளரும், அ.சா.1ம் போலீசாருடன் கலந்து ஆலோசித்து போலீசாரின் அறிவுறுத்தலின் பேரில் எதிரியின்

பெயரை குறித்தும், சம்பவத்தை குறித்தும், சாட்சிகளின் பெயர்களை குறித்தும், அபிவிருத்தி செய்து பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேலதிகாரிகளின் வேண்டுகோள்படி நடக்காத சம்பவத்தை நடந்ததாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.